**கண்காணிப்புப் பொறியாளர், பொபது., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை.**

முன்னிலை: திரு.சு.நாகராஜ்,எம்.டெக்.,எம்.பி.ஏ.,எம்.பில்.,
கண்காணிப்புப் பொறியாளர், பொபது.,

**செ.மு.ஆ.எண்.நி2/3617/2022. நாள்.26.12.2022.**

பொருள்: பணியமைப்பு - பொ.ப.து - த.நா.அ.ப.தொகுதி – கருணை அடிப்படையில் பணி நியமனம் - திருமதி.பா.அனுசுயா, த/பெ காலஞ் சென்ற அரசு திரு.எம்.பாண்டி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது – பணிவரன் முறை ஆணை வெளியிடப்பட்டது – தகுதிகாண் பருவம் துவக்கி ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) சென்னை 5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்3(4)/60479/2009/ நாள் 26.07.2018.

2. முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை மண்டலம் பொபது., சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.நி3(3)/40235/2018 நாள் 20.08.2018.

3. கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.ஆ2(1)/3617/2018/ நாள்.21.08.2018.

4. அரசாணை (3டி) எண்.19 பொப (பி1)துறை நாள்.3.11.2022.

*****

பார்வை(1) முதல் (3) வரை காணும் செயல்முறை ஆணைகளின் வாயிலாக, காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.எம்.பாண்டி அலுவலக உதவியாளரின் மகள் திருமதி.பா.அனுசுயா அவர்களை கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு இவ்வட்ட அலுவலகத்தில் 21.08.2018 முற்பகல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். பார்வை 4ல் காணும் அரசாணையின்படி திருமதி.பா.அனுசுயா, இளநிலை உதவியாளரின் பணி தனியர் பணியில் சேர்ந்த நாளான 21.08.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்திட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள் சட்டம்) 2016, பிரிவு 15 மற்றும் தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் பணப்பலன்கள் வழங்க ஏதுவாக பிரிவு

28(2)ன்படி திருமதி.பா.அனுசுயா இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் அப்பதவியில் பணிவரன் முறை செய்யப்பட்டு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். மேலும், இவர் இரண்டாண்டு தகுதிகாண் பருவ காலத்தை 3 ஆண்டு தொடர் பணியில் முடிக்க வேண்டும். இவர் தகுதிகாண் பருவ காலத்திற்கு பவானிசாகர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

28.12.22

1/3 கண்காணிப்புப் பொறியாளர் சார்பில் பொபது.,
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்
சேப்பாக்கம், சென்னை-5.

28/12/22

பெறுநர்

திருமதி. திருமதி.பா.அனுசுயா, இளநிலை உதவியாளர்,
வட்ட அலுவலகம்